# Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Sessions Judge, Magalir Neethi Mandram,
(Fast Track Mahila Court), Villupuram.

Sessions Case No.248-2018

Deposition of witness No. for Prosecution / Defence / Court

| | |
|---|---|
| Name | : சம்மந்தமூர்த்தி அ.சா.6 Lw.10 |
| Father's Name | : செல்வராஜ் |
| Village | : எண்.3, சண்முகபெருமாள்கோவில் தெரு, |
| Taluk | : கீழ்பெரும்பாக்கம் |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 63 |
| Time | : 5.33 pm - 5.40 pm |

Solemnly affirmed in accordance with the provisions of X of 1873 on the 19th day March 2021.
19.03.2021

முதல் விசாரணை.

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. இந்த வழக்கில் இறந்துபோன பீவி என்பவர் எங்கள் வீட்டில் வாடகைக்கு இருந்தார். சுமார் 3 வருடத்திற்கு முன்பு வாடகைக்கு இருந்தார். 2 மாதம் குடியிருந்தார். அந்த சமயங்களில் 2,3 நாள் வீட்டில் இருக்கமாட்டார். அவருக்கு கிராமம் இருப்பதாகவும், குழந்தைகள் இருப்பதாகவும் அங்கு போய் இருப்பதாகவும் சொல்வார். கடைசியாக போலீஸ் தான் மம்தாபீவி இறந்துவிட்டதாக என்னிடம் தெரிவித்தார். போலீஸ் வீட்டிற்கு வந்து விசாரணை செய்தார்கள். நான் வீட்டு உரிமையாளர் மற்றும் அங்கிருந்த மற்ற பக்கத்தில் குடியிருந்த மூன்று குடும்பத்தையும் விசாரித்துவிட்டு எழுதிக்கொண்டு போனார்கள். அழைப்பாணை வந்ததினால் வந்துள்ளேன். நான் சவுதிஅரேபியால் ஓவர்ஸ்சாக வேலை பார்த்தேன். போலீஸ் என்னை விசாரித்தார்கள்.

<u>சாட்சி பிறழ்சாட்சியாக மாறியதால் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலீசார் என்னை விசாரித்தனர் என்றும், அந்தவிசாரணையில் மமுதாபீவி எங்கள் வீட்டில் வாடகைக்கு குடியிருந்தபோது ஆஜர் எதிரி அந்த வீட்டிற்கு வந்து தங்கப்போவ இருப்பார் என்றால் தெரியாது. ரெண்பேருக்கும் கள்ளத்தொடர்பு இருந்தது என்றும், இருவரும் வாய்த்தகராறு ஏற்பட்டு சண்டை போர்டுக்கொண்டதாக 18.11.2017ம் தேதி நான் என் வீட்டில் இருந்தபோது ஆஜர் எதிரி என் வீட்டிற்கு வந்தார் என்றும், மமுதாபீவியை வண்டியில் வைத்துஅழைத்து செனச்றார் என்றால் சரியல்ல. இதுசம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், பச்சை நிறத்தில் புடவையும், பசஞ்ச நிற ஜாக்கெட்டும், தலையை மூடி முஸ்லீம் அணியும் பர்தா துணியும் அணிந்திருந்தார் என்றும், அன்றைக்கு போனதோடு வீட்டிற்கு வரவே இல்லை என்றால் சரியல்ல. இதுசம்மந்தமாக போலீசார் என்னை விசாரிததனார் எ்னறும், அப்போது போலீசிடம் சொல்லிவிட்டு தற்போது நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை - இல்லை.

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Sessions Judge, Magalir Neethi Mandram,
(Fast Track Mahila Court), Villupuram.

Sessions Case No.248-2018

Deposition of witness No. for Prosecution / Defence / Court

Name : கஸ்தூரி அ.சா.7 Lw.12

Father's Name : குமார்

Village : எண்.3, சண்முகபெருமாள்கோவில் தெரு,

Taluk : கீழ்பெரும்பாக்கம்

Caste :

Calling :

Religion :

Age : 36

Time : 5.40 pm - 5.45 pm

Solemnly affirmed in accordance with the provisions of X of 1873 on the 19th day March 2021.

19.03.2021

முதல் விசாரணை.

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.6 எங்கள் வீட்டு உரிமையாளர். அவரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை தெரியாது. பாய்வீட்டு அம்மா எங்கள் வீட்டு எதிர் வீட்டில் குடித்தனம் இருந்தார். 2 மாதம் குடியிருந்தார், அதற்குமேல் எங்கு போனார் என்று தெரியாது. போலீஸ் விசாரித்தார்கள். இதை தான் போலீசிடம் சொன்னேன்.

சாட்சி பிறழ்சாட்சியாக மாறியதால் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

போலீசார் என்னை விசாரித்தனர் என்றும், அந்தவிசாரணையில், பாய்வீடடு அம்மாவும், ஆஜர் எதிரியும் ஒரே வீட்டில் தான் குடித்தனம் செய்தார் என்றாலும்,

/2/

அது எனக்கு தெரியும் என்றாலும் சரியல்ல. இரண்டுபேருக்கும் தவறான உறவு இருந்தது என்றும், அதுசம்மந்தமாக இருவரும் சண்டை போட்டுகொள்வார்கள் என்றாலும் சரியல்ல. 18.11.2017ம் தேதி மாலை பாய்வீட்டு அம்மா ஆஜர் எதரியிடம் பேசப்போவதாக சொல்லி என் மாமியாரிடமிருந்து செல்போனை வாங்கி பேசிகிட்டு இருந்தார் என்றால் சரியல்ல. அதன்பிறகு 6 மணிக்கு ஆஜர் எதிரி கீழ்பெரும்பாக்கம் வந்தார் என்றும், இரண்டுபேரும் உள்ளேபோய் கதவை மூடிக்கொண்டார்கள் என்று போலீசிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சிறிதுநேரம் கழிதது ஆஜர் எதிரியும் மமுதாபிவியும் மோட்டர்ா பைக்கிள் போனதாகவும், அப்போது பச்சை நிறத்தில் புடவையும், பச்சை நிற ஜாக்கெட்டும், தலையை மூடி முஸ்லீம் அணியும் பர்தா துணியும் அணிந்திருந்தார் என்றும், அன்றைக்கு போனதோடு வீட்டிற்கு வரவே இல்லை என்றால் சரியல்ல. இதுசம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர் என்றும், அப்போது போலீசிடம் சொல்லிவிட்டு தற்போது நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை - இல்லை.</u>